**எம்பிலிபிட்டிய நகர சபை**

**இரத்தினபுரி மாவட்டம்**

-----------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்**

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 27 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 16 ஆந் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 செப்தெம்பர் 06 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து எம்பிலிபிட்டிய நகர சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கடன்கொடுத்தோர் மற்றும் வைப்புக் கணக்குகளில் முன்னைய ஆண்டின் இறுதியில் காணப்பட்ட மீதி மீளாய்வாண்டின் ஆரம்ப மீதியாக முன்கொண்டுவரப்படும் போது ரூபா 4,636,776 கூட்டுத்தொகையினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டமையின் காரணமாக நடைமுறைப் பொறுப்புக்கள் அப்பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டின் இறுதியில் திரண்ட நிதியத்தில் காணப்பட்ட மீதி மீளாய்வாண்டின் ஆரம்ப மீதியாக முன்கொண்டுவரப்படும் போது ரூபா 439,360 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டமையின் காரணமாக உரிமை மூலதனம் அப்பெறுமானத்தால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது நன்கொடையாகக் கிடைத்த ரூபா 28,952 கூட்டுத்தொகையான நூலகப் புத்தகங்கள் மூலதனமாக்கப்படாமையின் காரணமாக நிலையான சொத்துக்கள் அப்பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் போது கிடைத்ததன் பின்னர் மதிப்பிழந்திருந்த ரூபா 75,437 கூட்டுத்தொகையான 02 காசோலைகள் மதிப்பிழந்த காசோலைக் கணக்கில் சீராக்கப்படாமல், கணக்குகளிலிருந்து பதிவழிக்கப்பட்டமையின் காரணமாக நடைமுறைச் சொத்துக்கள் ரூபா 75,437 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) வேலைக் கடன்பட்டோரின் கீழ் மீளாய்வாண்டின் போது கிடைக்கப்பெற்ற ரூபா 637,480 தொகை திரண்ட நிதியக் கணக்கில் வரவு வைக்கப்பட்டமையின் காரணமாக திரண்ட நிதியம் அப்பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

## 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 03 கணக்கு விடயங்களில் மீளாய்வாண்டின் இறுதியில் நிதிக்கூற்றுக்களின் பிரகாரமான மீதிக்கும் பட்டோலைகளின் படியான மீதிக்கும் இடையே ரூபா 18,233,169 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டில் 19 வருமான விடயங்களுக்குரிய தொகுதி ஒன்றுசேர்த்தல் பதிவேட்டின் பிரகாரமான மீதிக்கும் நிதிக்கூற்றுக்களின் படியான மீதிக்கும் இடையே ரூபா 1,044,243 தொகையான வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

### 1.3.3 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை

மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற ரூபா 5,733,252 தொகையான இயந்திரங்களினதும் இயந்திர உபகரணங்களினதும் மற்றும் ரூபா 2,320,011 தொகையான தளபாடங்களினதும் பொருத்திகளினதும் மீதிகளுக்கான விரிவான பட்டோலை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமைகள்

கீழே குறிப்பிடப்படுகின்ற சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு** | **இணங்காமைகள்** |
| --- | --- |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| (அ) நிதிப்பிரமாணம் 371(2) | 2007 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் 12 சந்தர்ப்பங்களின் போது செலுத்தப்பட்ட ரூபா 932,291 கூட்டுத்தொகையான உபகட்டுநிதி 2017 சனவரி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) நிதிப்பிரமாணம் 571 | 2013 ஆம் ஆண்டு முதல் 2014 செப்தெம்பர் வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 349,752 கூட்டுத்தொகையான வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 34,044,357 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 25,367,722 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நிதி விளைவில் ரூபா 8,676,635 அதிகரிப்பொன்று காணப்பட்டது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

நிதி விளைவுகள் ரூபா 8,676,635 இனால் அதிகரித்தமை தொடர்பில் 04 விடயங்களின் வருமானம் ரூபா 8,054,214 இனால் அதிகரித்தமை மற்றும் 03 மீண்டெழும் செலவின விடயங்கள் ரூபா 2,383,843 இனால் குறைவடைந்தமை. பிரதானமாகத் தாக்கமளித்திருந்தன.

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட | உள்ளபடியான | திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| வீதவரியும் வரியும் | 18,010 | 17,750 | 29,726 |
| வாடகை | 11,569 | 14,438 | 6,804 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 2,329 | 3,382 | 2,201 |
| ஏனைய வருமானம் | 45,500 | 42,297 | 18,015 |

**2.3.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்**

---

மீளாய்வாண்டில் மதிப்பிடப்பட்ட வருமானத்தை சேகரிக்கப்பட்ட வருமானத்துடன் ஒப்பிடும் போது பிடியாணைக் கட்டணமும் தண்டப்பணமும் மற்றும் அரசாங்கத்தின் பங்களிப்பு என்ற வருமான விடயங்களில் சேகரிக்கப்பட்ட வருமானம் பாதிடப்பட்ட அளவினை விட முறையே 45 சதவீதம் மற்றும் 28 சதவீதத்தாலும் குறைவடைந்திருந்தது.

**2.3.3 வாடகை**

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பள்ளேகம பொதுச் சந்தையில் 27 கடைகளிலிருந்து 2012 மார்ச் முதல் 2016 செப்தெம்பர் வரையான காலப்பகுதியில் நிலுவையாக இருந்த ரூபா 505,000 கூட்டுத்தொகையான வாடகை 2016 திசெம்பர் வரையிலும் அறவிடுவதற்கு முடியாதிருந்தது.

(ஆ) 2016 யூலை 31 ஆந் திகதி வரையில் பள்ளேகம பேரூந்து நிலையத்தில் அமைந்துள்ள 30 தற்காலிக கடைகளிலிருந்து அறவிடவேண்டிய ரூபா 2,909,300 கூட்டுத்தொகையான வாடகை 56 மாதம் முதல் 01 மாதம் வரையான காலம் நிலுவையாகக் காணப்பட்டதுடன் 22 கடைகளின் வாடகையாளர்களுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

**2.3.4 ஏனைய வருமானம்**

---

பேரூந்து தரிப்பிடத்தின் பேரூந்து தரிப்பிடக் கட்டண வருமானமாக 2016 ஆம் ஆண்டிற்காக ரூபா 1,001,000 தொகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் பேரூந்து தரிப்பிடத்திலிருந்து சபைக்கு எந்தவொரு வருமானத்தையும் அறவிடுவதற்கு 2017 சனவரி வரையிலும் முடியாதிருந்தது.

**2.3.5 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

2016 சனவரி முதல் ஆகஸ்ட் 21 ஆந் திகதி வரையான காலத்தில் சப்ரகமுவ மாகாண சபைக்கு எல்பிட்டிய நீதவான் நீதமன்றத்திலிருந்து நீதிமன்றத் தண்டப்பணமாக ரூபா 376,964 தொகை கிடைத்திருந்ததுடன் 2017 சனவரி வரையிலும் அப்பணத்தை மீளளிப்புச் செய்து கொள்வதற்கு முடியாதிருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

மீளாய்வாண்டிற்குரிய பாதீட்டின் பிரகாரம் வேலைகளுக்காக ரூபா 133,300,000 தொகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் தனித்தனியாக வேலைகள் இனங்காணப்பட்டிருக்க வில்லை. ஆண்டின் இறுதியின் போது நகரசபை நிதிஏற்பாட்டின் கீழ் ரூபா 9,385,454 கூட்டுத் தொகையான 16 வேலைகளும், மாகாண சபை நிதிஏற்பாட்டின் கீழ் ரூபா 6,637,943 கூட்டுத்தொகையான 08 வேலைகளும், மத்திய அரசாங்கத்தின் நிதிஏற்பாட்டின் கீழ் ரூபா 3,445,854 பெறுமதியான 07 வேலைகளும் ஆக கூட்டு மொத்தமாக ரூபா 19,469,251 தொகை செலவில் 31 வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன.

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

1991 ஆகஸ்ட் முதல் 2011 பெப்ரவரி வரையான காலப்பகுதிக்காக 07 உத்தியோகத்தர்களின் ரூபா 76,977 கூட்டுத்தொகையான ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்குப் பங்களிப்புப் பணம் தாமதமாகச் செலுத்தப்பட்டமையின் காரணமாக ரூபா 72,386 தொகையான மிகைக் கட்டணத்தைச் செலுத்த வேண்டிஏற்பட்டிருந்தது.

**3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்குச் சொந்தமான நிலத்தின் அளவான 3.99 ஹெக்டேயர் மற்றும் 13.2 பேர்ச் அளவான காணியின் 18 கூறுகளுக்கு எல்லை நிர்ணயித்து பாதுகாப்பு

வேலி அமைத்து மதிலை நிர்மாணித்து அந்த சகல காணிகளையும் பாதுகாப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 பெப்ரவரி 21 ஆந் திகதிய பொதுச் சபைக் கூட்டத் தீர்மானத்தின் பிரகாரம் ஆதனவரி நிலுவையை சேகரிப்பதற்கு நியமிக்கப்பட்ட சொத்துக்களை தடைசெய்யும் உத்தியோகத்தர்களுக்கு மிகைக் கட்டணமாக 15 சதவீத தரகுப்பணம் செலுத்த வேண்டியிருந்த போதிலும், ஆதனவரி நிலுவையின் பெறுமதி சரியாக பட்டியல்படுத்தப்படாமையினால் தரகுப் பணத்தைச் செலுத்தும் அடிப்படை சரியாக இனங்காணப்படாமையின் காரணமாக 2014 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை கூட்டுமொத்தமாக ரூபா 210,466 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்ததுடன் 2017 ஆகஸ்ட் வரையிலும் அதில் ரூபா 26,546 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

### 3.4 ஒப்பந்த நிர்வாகம்

-------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ரூபா 779,177 செலவில் தெல்பதுஆற மோலவத்த வீதிக்கு கொங்கிரீட் இடும் வேலை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட களப்பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) வீதியின் அரும்பத்தில் 20 மீற்றரில் கொங்கிரீட் கலவை மிகவும் பலவீனமான நிலையில் காணப்பட்டதுடன் ¾" கல் வெளிப்பட்டு சீமெந்துக் கலவை மிகவும் இலகுவாக கழன்று செல்லக் கூடியதாகக் காணப்பட்டது.

(ii) இரண்டாவது 20 மீற்றரில் வீதியின் மொத்த அகலத்தில் 02 வெடிப்புக்கள் மற்றும் 60 மீற்றருக்கும் 80 மீற்றருக்கும் இடையே வீதியின் மேற்பரப்பு நடுவில் வெடிப்புக்கள் ஏற்பட்டிருந்தன.

(iii) வீதியின் 80 மீற்றரில் மொத்த அகலத்தில் வீதி வெடித்து வலதுபக்க அருகில் ஒரு பகுதி வீதியை விட்டு விலகிச் செல்லும் அளவிற்கு வெடித்திருந்ததுடன், இறுதி 20 மீற்றர் முதல் முழு வீதியும் முடிவடையும் வரை திருப்திகரமான நிலையில் காணப்படவில்லை.

(ஆ) உடன்படிக்கை செய்யப்பட்ட ரூபா 430,745 பெறுமதியான மொதறவான வீதிக்கு கொங்கிரீட் இடும் வேலை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது வீதியின் கொங்கிரீட் கலவையின் பலவீனத்தின் காரணமாக கொங்கிரீட் கலவையின் மேற்பரப்பில் கற்கள் வெளிப்பட்டிருந்ததுடன் மணல், சீமெந்து, கற்கலவை என்பன மிகவும் இலகுவாக கழன்று செல்லும் நிலையில் காணப்பட்டது. மேலும், இந்த வேலையின் மேற்பார்வைக்காக தொழிநுட்ப உத்தியோகத்தரொருவருக்கு பொறுப்புக்கள் கையளிக்கப்பட்டமை கோவைகளின் படி உறுதிப்படுத்தப்படவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் 16 செலவின விடயங்களில் ரூபா 6,715,000 கூட்டுத்தொகையான மொத்த நிதிஏற்பாடும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் 04 செலவின விடயங்களில் பாதீடு செய்யப்பட்ட நிதிஏற்பாட்டு அளவினைவிட விஞ்சி ரூபா 254,631 செலவிடப்பட்டிருந்தது.

### 4.2 வருடாந்த பெறுகைகள் திட்டம்

மீளாய்வாண்டிற்காக பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.4 உள்ளகக் கணக்காய்வு

நகர சபை தொடர்பாக மீளாய்வாண்டிற்காகவும் முன்னைய ஆண்டிற்காகவும் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 4.5 தீர்க்கப்படாதுள்ள மற்றும் பதிலளிக்கப்படாதுள்ள கணக்காய்வு ஐயவினாக்கள்

2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் கணிப்பீடு செய்யக்கூடிய ரூபா 2,811,737 பெறுமதியான 03 கணக்காய்வு ஐயவினாக்களிற்கு பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கீழே குறிப்பிடப்படுகின்ற முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் வேண்டப்படுகின்றது.

| | முறைமைகள் | | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| (அ) | கணக்கீடு | (i) | கணக்குகளிலிருந்து கைவிடல் |
| | | (ii) | அதிகரித்துப் பதிதல் |
| | | (iii) | பட்டோலைகள் நிதிக்கூற்றுக்களுடன் இனங்காமை |
| | | (iv) | பேரேடுகள் நிதிக்கூற்றுக்களுடன் இணங்காமை |
| (ஆ) | வருமான நிர்வாகம் | | நிர்ணயிக்கப்பட்ட வருமானம் அறவிடப்படாமை |
| (இ) | ஒப்பந்த நிர்வாகம் | | தரத்தன்மை குறைவடைந்தமை |
| (ஈ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | (i) | நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டமை |
| | | (ii) | நிதிஏற்பாட்டை விஞ்சி செலவினங்களைச் செய்தாமை |